DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 488 / 2014 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 8 |
| Name | திரு. முத்துகிருஷ்ணன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | உதவி ஆய்வாளர், ஏரல் காவல்நிலையம். |
| Religion | |
| Age | |

**<u>(பிரிவு 299 சிஆர்பிசி ன் கீழ் சமூக நீதிமன்றத்தால் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது. )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 20-02-2026.(நேரம்: 03.07PM )**

**<u>முதல்விசாரணை</u>**

நான் தற்போது ஏரல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்கிறேன். இந்த வழக்கினை குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் திரு. மந்திர மூர்த்தி இறந்து விட்ட படியால் அவரின் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 27.02.2014 ம் தேதி ஏரல் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலர் கோவில்பிள்ளை காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது நிலைய குற்ற எண் 83/14 சட்டபிரிவுகள் இதச 457,380 பதிவு செய்த வழக்கை விசாரணைக்கு வேண்டி விசாரைணை அதிகாரியிடம் ஒப்படைத்தார்.

விசாரணை நகலை விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்ததை அவர் 27.002.2014 ம் தேதி காலை 09.00 மணிக்கு சாட்சிகள் பிரபாகர் மற்றும் முத்துதுரை ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும்

வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ 6ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு சாட்சிகள் அருள்ராஜ், பெரியசாமி, பிரபாகர், முத்துதுரை, ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு. கோவில்பிள்ளை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

விசாரணையின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை 22.02.2014 ம் தேதி மாலை 06.00 மணிக்கு அம்மாள்தோப்பு பஸ்நிலையம் முன்பு வைத்து இவ்வழக்கின் எதிரி சாட்சிகள் பன்னீர்செல்வம் மற்றும் திருமணி என்ற செல்வராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே தேதியில் காலை 08.00 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி வீட்டின் பின்புறம் ஒளித்து வைத்திருந்த வழக்கு சொத்து பொருள்களை எடுத்து ஆஜர் செய்தததை உதவி ஆய்வாளர் கைப்பற்றி அத்தாட்சி பிறப்பித்துள்ளார். **அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி முறையே அசாஆ 8,9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு கைது செய்யப்பட்ட இவ்வழக்கின் எதிரியை நிலைய ஆவணங்களில் பதிவு செய்து பின் தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றம் அனுப்பியுள்ளார். அத்தாட்சி மூலம் கைப்பற்றி ய வழக்கு சொத்து பொருள்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி பிஆர்எண் 238/2014 பெற்றுள்ளார்.**அந்த படிவம் 95ல் உள்ள வழக்கு சொத்து பொருள்கள் சாபொ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இத்துடன் தனது விசாரணையை முடித்து 27.02.2014 ஆம் தேதி எதிரி மீது இதச பிரிவுகள் 457,380 இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றம் அனுப்பியுள்ளார்.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.